**OS.No. 15/2021 PW : 1, திரு. சம்பத் 15.07.2022**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

என்னுடைய அம்மா சொத்தில் எனக்கு பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் 366/4 ஆகும். 1 ஏக்கர் 39 சென்ட் ஆகும். தாவா சொத்தின் பழைய நான்குமால்கள் எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண்ணை நான் தவறாக சொல்கிறேன் என்றால் எனக்கு சர்வே எண் ஞாபகமில்லை. விஸ்தீரனம் சரியானது தான். 2004ம் வருடம் தாவா சொத்தை என் தாயார் பாதுகாப்பில் விட்டுவிட்டேன். 2004க்கு பின்னர் நான் தாவா சொத்திற்கு செல்லவில்லை. என் தாயார் தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு 04.07.2008ல் ஒரு பதிவு உயிலை எழுதி வைத்திருக்கிறார் என்று சொன்னால் அந்த உயில் பற்றி எனக்க தெரியாது. எனக்கு ஆங்கிலம் தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் 04.07.2008 உயில் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அந்த உயிலை பற்றி எனக்கு தெரியாது என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே வயது வித்யாசம் 30 வருடம் இருக்குமா என்று கேட்டால் என் தாயாருக்கு நான் முதலில் பிறந்தேன். பிரதிவாதி 5வதாக பிறந்தார். என் தாயாருக்கு மொத்தம் 5 குழந்தைகள். அதில் நானும் பிரதிவாதி மட்டும் உயிருடன் இருக்கிறோம். மற்ற 3 நபர்கள் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார்கள்.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY Date: 2022.07.15 17:18:13 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.